پாடம் - 6

الدرس السادس

## அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தல்

## الهجرة إلى الحبشة

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை குறிப்பாக பலவீனர்களை இணைவைப்பவர்கள் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டிருந்ததனால் நபித்தோழர்கள் தம் மார்க்கத்தைக் காத்துக்கொள்வதற்காக அபீசீனியாவை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டு, அங்குள்ள மன்னர் நஜ்ஜாஷியிடம் செல்வதற்கு அனுமதிக்குமாறு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள். குறிப்பாக அவரிடம் மட்டுமே அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதால். ஏனெனில் பெரும் பாலான முஸ்லிம்கள் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் குறைஷிகளால் தீங்கு ஏற்படுமோ எனப்பயந்து கொண்டிருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அபீஸீனியா செல்வதற்கு அனுமதித்தார்கள். இது நடந்தது நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டில்.

சுமார் எழுபது முஸ்லிம்கள் தம் குடும்பத்துடன் அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தனர். இவர்களில் உஸ்மான்(ரலி) அவர்களும் அவர்களின் மனைவியான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள் ருகைய்யா(ரலி) அவர்களும் இருந்தனர். அந்த முஸ்லிம்கள் அபீசீனியாவில் தங்கியிருக்கும் சூழ்நிலையையும் இணைவைப்பவர்கள் குலைத்திட முயற்சி செய்தார்கள். அபீசீனிய மன்னருக்கு அன்பளிப்புகள் அனுப்பிவைத்து தங்களது நாட்டிலிருந்து ஓடி வந்த முஸ்லிம்களைத் தங்களிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும் முஸ்லிம்கள் ஈஸா(அலை) அவர்களையும் அவர்களின் தாயாரையும் திட்டுகிறார்கள் என்றும் புகார் கூறினார்கள். இதுபற்றி நஜ்ஜாஷி மன்னர் முஸ்லிம்களிடம் விளக்கம் கேட்டபோது அதற்கவர்கள் ஈஸா(அலை) அவர்களைப் பற்றி இஸ்லாம் கூறுவதை அவருக்குத் தெளிவுபடுத்தி உண்மையை விளக்கிக் கூறினார்கள். திருக்குர்ஆனில் உள்ள ‘மர்யம்’ என்ற அத்தியாயத்தை ஓதிக்காட்டினார்கள். பிறகு மன்னர் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கினார். குரைஷிகளிடம் அவர்களைத் திருப்பி ஒப்படைக்க மறுத்து விட்டார்.

இதே ஆண்டு ரமலானில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவிற்குச் சென்றார்கள். அங்கு குறைஷிகளின் பெரும் கூட்டமொன்று இருந்தது. அங்கு நின்று கொண்டு நஜ்ம் அத்தியாயத்தை ஓத ஆரம்பித்தார்கள். இந்த இறைநிராகரிப்பாளர்கள் இதற்கு முன் அல்லாஹ்வின் வார்த்தையைச் செவியேற்றது கிடையாது. காரணம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து எதையும் செவியேற்காதீர்கள் என்று தொடர்ந்து அவர்கள் பரஸ்பரம் கூறிக்கொண்டிருந்தார்கள். இப்போது நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் திடீரென இந்த அத்தியாயத்தை ஓதிக்காட்டியபோது- ஈர்ப்பு சக்தியுள்ள இத்தெய்வீகவாக்கு அவர்களின் செவிகளைத் தட்டியபோது அவர்களில் ஒவ்வொருவரும் அதை செவிதாழ்த்திக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதல்லாத வேறெதுவும் அவர்களின் உள்ளத்தில் ஊசலாடவில்லை. இறுதியாக ‘அல்லாஹ்வுக்கே சிரம்பணியுங்கள்! அவனையே வணங்குங்கள்!’ (53:62) என்ற வசனத்தை ஓதி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஸுஜூது செய்தபோது அவர்கள் அனைவரும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் ஸஜ்தாவில் விழுந்தார்கள். இவ்வழைப்புப் பணியை எதிர்க்கும் வழியில் குரைஷிகள் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றினர், துன்பம் கொடுத்தனர், கொடுமைகள் இழைத்தனர், ஆசை வார்த்தைகளைக் காட்டினர், அச்சுறுத்தினர்.

ஆயினும் இவையனைத்தும் இஸ்லாத்தை உறுதியாகப் பற்றிப் பிடிப்பதற்கும் முஃமின்கள் அதிகமாவதற்குமே வழிவகுத்தன. இப்போது குறைஷிகளின் உள்ளத்தில் புதியதொரு திட்டம் பளிச்சிட்டது! அதுதான் முஸ்லிம்களையும் பனூஹாஷிம் கிளையினரையும் ஒட்டுமொத்தமாக சமூகப்பகிஷ்காரம் செய்ய வேண்டும் அவர்களிடம் கொடுக்கல் வாங்கல், திருமணம், உதவி போன்ற எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒரு ஏட்டில் எழுதி அதில் அவர்கள் அனைவரும் கையெழுத்திட்டு கஅபா ஆலயத்தின் உள்ளே தொங்கவிட வேண்டும் என்பது!

எனவே முஸ்லிம்கள் மக்காவிற்கு வெளியே ஒரு கணவாய்ப் பகுதிக்கு செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானார்கள். அதற்கு அபூதாலிப் கணவாய் என்று பெயர். அங்கு முஸ்லிம்கள் மிகக் கடுமையான கஷ்டத்திற்கு ஆளானார்கள். பசியையும் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்தனர். அவர்களில் வசதியுள்ளவர்கள் தங்களின் பெரும் செல்வத்தை செலவிட்டனர். கதீஜா(ரலி) அவர்கள் தம் செல்வம் அனைத்தையும் செலவு செய்தார்கள். முஸ்லிம்களுக்கு மத்தியில் நோய் நொடிகள் பரவியது. பெரும்பாலோர் அழிந்துவிடும் நிலைக்கு ஆளாயினர். எனினும் அவர்கள் நிலை குலையாமல் உறுதியோடும் பொறுமையோடும் இருந்தார்கள். அவர்களில் எவரும் தன் மார்க்கத்திலிருந்து பின்வாங்கவில்லை.

இப்புறக்கணிப்பு மூன்றாண்டுகள் நீடித்தது. பின்னர் குரைஷிகளில் பனூஹாஷிம்களுடன் உறவுமுறைத் தொடர்பு வைத்திருந்த சில முக்கியப் பிரமுகர்கள் அந்த ஏட்டிலுள்ள ஒப்பந்தத்தை முறித்தார்கள். அதை மக்களிடையே பகிரங்கப் படுத்தினார்கள். அவர்கள் அந்த ஏட்டை வெளியே எடுத்தபோது அதைக் கரையான்கள் அரித்திருந்ததைக் கண்டார்கள். அதில் ‘இறைவா! உனது திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறேன்’ என்ற வாசகத்தைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்கவில்லை. நெருக்கடி நீங்கி முஸ்லிம்களும் பனூஹாஷிம்களும் மக்காவுக்குத் திரும்பினர். ஆனாலும் குறைஷிகள் அநீதியான தமது நிலைப்பாட்டிலேயே பிடிவாதமாக இருந்தனர்.